**செய்தி வெளியீடு எண் : 585** **நாள் : 14.03.2025**

# <u>சென்னையில்</u>
# <u>நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்து</u>
# <u>மராத்தான் ஓட்டம்</u>

தேசிய நுகர்வோர் தினம் மற்றும் உலக நுகர்வோர் உரிமை தினத்தைக் கொண்டாடிடும் பொருட்டு, மாநில மற்றும் மாவட்ட அளவிலான நுகர்வோர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கல்வி நிறுவனங்களில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள் மூலமாக தமிழ்நாடு அரசின் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பத் துறையின் சார்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, **நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்த மராத்தான் ஓட்டம்** நாளை (15.03.2025) காலை 06.30 மணியளவில் சென்னை தீவுத்திடலில் நடைபெற உள்ளது. இம்மராத்தான் ஓட்டத்தில் பள்ளி / கல்லூரி, மாணவ / மாணவியர்கள் 2000 பேர் பங்கேற்க உள்ளார்கள்.

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்களின் தலைமையில் நடைபெறும் இம்மராத்தான் போட்டியினை, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள் சென்னை தீவுத்திடலிருந்து கொடியசைத்து துவக்கி வைக்க உள்ளார்கள். தீவுத்திடலில் ஆரம்பித்து அண்ணாசாலை, சிவானந்தா சாலை வழியாகச் சென்று திரும்பவும் தீவுத்திடலுக்கு வந்து மராத்தான் ஓட்டம் நிறைவு பெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், துணை மேயர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு முதன்மைச் செயலாளர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பங்குபெறும் அனைத்து பள்ளி / கல்லூரி, மாணவ / மாணவியர்களின் நலன் கருதி, தொடர் ஓட்டத்திற்குத் தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளான போக்குவரத்து, குடிநீர் வசதி, மருத்துவ உதவி உள்ளிட்டவை செய்யப்பட்டுள்ளன.

******************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu